1978 மார்ச் 11]

## நடுநிலைப் பள்ளிகளில் கோடை விடுமுறை.

*512 வினா—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்திலுள்ள நடுநிலைப் பள்ளிகளில் இரண்டு மாத கோடை விடுமுறையாகவும், நெல்லை மற்றும் ஒரு சில மாவட்டங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளில் 1 மாத கோடை விடுமுறையும் விடப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இவற்றை ஒரே சீராக்கி செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) அனைத்து நடுநிலைப் பள்ளிகளும் கல்வி ஆண்டில் 220 நாட்கள் செயல்பட வேண்டும். பள்ளிகள் அமைந்துள்ள பகுதிகளின் சூழ்நிலையைப் பொருத்து அந்தந்த பகுதிகளில் இயங்கும் பள்ளிகளுக்கு கோடை விடுமுறை உள்ளிட்டு விடுமுறைகள் வசதிக்கேற்ப அனுமதிக்கப்படுகிறது. எனவே இதனை ஒரே சீராக்கி செயல்படுத்த அவசியமில்லை.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள மற்ற மாவட்டங்களை விட குமரி மாவட்டத்தில் எல்லா சட்ட திட்டங்களும் மாறுபட்டிருக்கின்றன. குறிப்பாக கல்வித் துறையை பொறுத்தமட்டில் மற்ற இடங்களில் 30 நாட்கள் விடுமுறை இருக்கிறது. ஆனால் குமரி மாவட்டத்தில் 60 நாட்கள் விடுமுறை விடப்படுகிறது. அதனாலே அந்தப் பகுதி மக்கள் கல்வித்தரம் கெடும் என்ற காரணத்தினால் அதை மாற்றி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, வேலை நாட்கள் 220 இருக்க வேண்டும் என்பது அரசினுடைய ஆணை. அதற்கேற்ப அவர்கள் விடுமுறையை விடும் உரிமையை தந்திருக்கிறோம். இதனால் கல்வி பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராமன் : தலைவர் அவர்களே, கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு ஆகிய இடங்களில் உள்ள ஆங்கிலப் பள்ளிகளில், இங்கிலிஷ் கான்வென்டுகளில் ஜனவரியிலிருந்து

ஜனவரி வரை என்று கல்வி ஆண்டுகள் உள்ளன. அதை மாற்றி ஜூன் முதல் ஜூலை வரை என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதா? அப்படி இருந்தால் எப்போது முதல் அமலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மாணவர்கள் ஒரு ஆண்டுக்குத் தேவையான படிப்பு நாட்களில் இடைக்காலத்தில் லீவு எடுக்காமல், ஒழுங்காக 220 நாட்களும் ஆஜராகி விடுவதால் லீவுகள் அதிகமாகி வருகிறது. ஆகவே, குமரி மாவட்டத்தில் நடுநிலைப் பள்ளிகளில் அரையாண்டுத் தேர்வு முடிந்தபிறகும், கிறிஸ்து பிறப்புக்கும் புதுவருட லீவும் சேர்த்து 10 நாட்களுக்குத்தான் லீவு விடுகிறார்கள். அதைக் கூட்டி 20 நாட்களுக்கு லீவு கொடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த உரிமையை நாம் பள்ளிகளுக்குத் தந்திருப்பதன் மூலமாக அங்கேயே அவர்கள் நிறைவு செய்து கொள்ளலாம். 220 நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்பது எங்கள் நோக்கம்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இட ஒதுக்கீடு.

*513 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில், பணிபுரியும் ஆசிரியர் களுக்கு பி. டி. பயிற்சியில் இடஒதுக்கீட்டின் சதவீதத்தினை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

*514 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில், பணிபுரியும் ஆசிரியர் களுக்கென குறுகியகால B.T., பயிற்சி அளிக்கும் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.